தரம் 10 11

O/L

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## பழமொழிகள்

ZOOM ONLINE CLASS

சரியான றைத்
தெ யுங்கள்

TUTE 26



The Best TAMIL ACADEMY
அகரம்
தினேஸ் ONLINE ACADEMY

REGISTER NOW 0778054232

தமிழ் ஆசான்
"அகரம் தினேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

05 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

## பழமொழிகளும் பொருளும்

- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - ஒற்றுமையே பலம்
- அகத்தின் அழகு முகத்தில் தெரியும் - முகம் உள்ளத்தின் இயல்பை தெரிவிக்கும்
- அளவுக்கு மிஞ்சினா மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு - எதையும் அளவோடு அனுபவித்தல் வேண்டும்.
- அழுத பிள்ளை பால் குடிக்கும் - முயற்சி உடையவர்கள் பயன் பெறுவர்
- அணை கடந்த வெள்ளம் அழுதாலும் நஞ்சு - நடந்து முடிந்த செயலைப் பற்றி சிந்தித்து பயனில்லை
- அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம் - நட்பின் சிறப்பு
- அஞ்சியவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய் - பயம் உள்ளவனுக்கு எதைக்கண்டாலும் பயம்
- அறையில் ஆடிய பின் அம்பலத்தில் ஆட வேண்டும் - பயிற்சி இல்லாமல் எதையும் செய்யக் கூடாது
- அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும் - அரசன் உடனே தண்டிப்பான் தெய்வம் நாளாக நாளாக தண்டிக்கும்
- அச்சாணி இல்லா தேர் முச்சாணும் ஓடாது - முக்கியமானவர் இன்றி எக்கருமமும் நடைபெறாது.
- அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும் - உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுதல்.
- அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - விடாமுயற்சி வெற்றி அளிக்கும்.
- அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம் - உண்மை நட்பு
- அரைக்காசுக்கு அளித்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது - கற்பின் பெருமை
- ஆழமறியாது காலை விடாதே - எதையும் ஆராய்ந்து பார்த்து செய்தல் வேண்டும்.
- ஆனைக்கும் அடி சறுக்கும் - பெரியவர்களுக்கும் தவறு ஏற்படலாம்
- ஆடத்தெரியாதவன் அரங்கு கோணலென்றனாம் - விடயத்தெளிவின்றி எதையும் குறை கூறாதே
- ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம் - கோபம் அறிவைக் கெடுக்கும்
- ஆறிலும் சாவு நூறிலும் சாவு - நிலையில்லாத வாழ்வு
- ஆறின கஞ்சி பழங்கஞ்சி - எக்காரியத்தையும் தாமதப்படுத்தக் கூடாது

AGARAM DHINES

- ஆடு நனைகின்றதென்று ஓநாய் அழுகிறது - பொய் அழுகை
- ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் -
- ஆலையில்லா ஊருக்கு இலுப்பை பூ சர்க்கரை - அற்பனுக்கு மதிப்பு
- ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் - காலம் மாறலாம்
- ஆழ அமுக்கினாலும் நாழி முகவாகாது - கொள்ளக்கூடிய அளவே கொள்ளும்.
- இளமையில் கல்வி சிலையில் எழுத்து - இளமையில் கற்பது என்றும் நிலைத்திருக்கும்
- இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை - திருப்தியற்ற மனம்
- இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை - தருமம் செய்தவர்கள் அழிவதில்லை
- இட்டுக்கெட்டார் எவருமில்லை - உதவி செய்து கெட்டுப் போனவர் எவருமில்லை
- இளங்கன்று பயமறியாது - வாலிபத் துணிவு
- இரக்கப் போனாலும் சிறக்கப் போ - வறுமையிலும் சிறப்பாக வாழ வேண்டும்
- இறைத்த கிணறே ஊறும் இறையாத கிணறே நாறும் - தருமத்தின் பெருமை
- உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? - தகுதிக்கு மேலே எண்ணாதே
- உறியில் நெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவானேன் - வேண்டியதை தன்னிடம் வைத்துக் கொண்டு ஏனையோரிடம் வேண்டல்
- உடையவன் பாரா வேலை ஒருமுழம் கட்டை - உரியவன் இல்லாக் கருமம் குறைப்படல்
- உப்பிட்டவரை உள்ளளவும் நினை - உதவி செய்தவரை மறக்கக் கூடாது
- உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா? - கூடி வாழ்ந்தர்களுக்கு கெடுதல் நினைக்கக் கூடாது
- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் - பிறருக்கு ஈயாத பொருள் துன்பத்தை தரும்
- ஊசி போகுமிடம் பார்ப்பார் உலக்கை போகுதிடம் பாரார் - சிறிய விடயங்களில் கவனம் செலுத்துமளவு பெரிய விடயங்களில் கவனயீனமாக இருத்தல்.
- ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் - ஒற்றுமையின் அவசியம்
- ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் - பிறர் குழப்பத்தில் மகிழ்வடைதல்
- எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு - வீண் பெருமை
- எச்சில் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை எடுப்பான? உலோபித்தனம்
- எட்டி பழுத்தென்? ஈயாதார் வாழ்ந்தென்ன? ஈகையி அவசியம்
- எய்தவன் இருக்க அம்பை நோவானேன் - தவரான அபிப்பிராயம்
- ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் - ஏழ்மை கண்ணீரின் வலிமை
- ஐந்து பணத்திற்கு குதிரையும் வேண்டும் ஆறு கடக்க பாயும் வேண்டும் - பேராசை

AGARAM DHINES

- ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா - காலம் நில்லாது
- ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமோ? - கூட்டு முயற்சியின் முக்கியத்துவம்
- ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு ஒரு சோறு பதம் - ஒருவரது செயலை வைத்து ஒரு கூட்டத்தை கணிப்பிடலாம்
- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - ஒற்றுமையாக இருந்தால் எதனையும் சாதிக்கலாம்.
- கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா? தகுதிக்கு மேலே எண்ணுதல்
- கடுகு சிறிதானாலும் காரம் பெரிது - சிறிய தெனினும் சிறப்புண்டு
- கந்தையானாலும் கசக்கி கட்டு - தூய்மையாக இருத்தல், வறுமையில் இருந்தாலு் செம்மையாக வாழ வேண்டும்.
- கரும்பு தின்னக் கைக் கூலியா? நன்மைக்கு அதிகம் விரும்புவர்
- காகம் திட்டி மாடு சாகாது - வீண்பழிக்கு அஞ்சேல்
- கிட்டாதாயின் வெட்டிடென மற - கிடைப்பதற்கு அரிதாக இருந்தால் உடனே மறந்து விடுவது நல்லது.
- கிணற்றுக்குவளைக்கு நாட்டு வளப்பமேன் - உலகை அறி
- குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் - மனசாட்சி உறுத்தல்
- கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை - பேராசை
- கெட்டாலும் செட்டி கிளிந்தாலும் பட்டு - புகழ் மங்காது
- கெடுவான் கேடு நினைப்பான் - அழிவு அழிவை தரும்
- குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் - வீண் பெருமை
- குப்பையிலே கிடந்தாலும் குன்று மணி மங்காது - நற்புகழ் மங்காது
- கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? - தெளிவு
- கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சான் - பயம் அறியாத தன்மை
- கொல்லர் தெருவில் ஊசி விற்கலாமா? - இடமறியா மடமை
- கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன் - கற்றோரின் மேன்மை
- கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு - குணத்தின் மேன்மை
- கோழி மிதித்து குஞ்சு முடம் ஆகுமா? - பெற்றோரின் கண்டிப்பு அல்லது தண்டிப்பு பிள்ளைகளை பாதிக்காது
- சண்டிக் குதிரை நொண்டிச் சாரதி - பொருத்தமற்ற தொடர்பு
- சக்கரை என்றால் தித்திக்குமா? - போலி முகம்
- சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் - பயம் இன்மை
- சின்னப்புள்ள வெள்ளாமை வீடு வந்து சேராது - அனுபவமில்லா செயல் முற்றுப்பெராது
- சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா? - பொருத்தமின்மை
- சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி - தானே பகையை தேடுதல்
- சூடு கண்ட பூனை அடுப்பங் கரையிற் சேராது - அனுபவம்





AGARAM DHINES

- செயவன திருந்தச் செய் - ஒரு செயலை முறையாக செய்ய வேண்டும்
- சென்ற இடம் எல்லாம் சிறப்பே கல்வி - கல்வியின் சிறப்பு
- சேராத இடத்தில் சேர்ந்தால் துன்பம் வரும் - கீழான நட்பின் இழிவு
- சேற்றிலே செந்தாமரை போல - கீழ்மையில் மேம்பட்டோர்
- சொப்பனங் கண்ட அரிசி சோற்றுக்காகுமா? - வாய்ப்பேச்சில் பலனில்லை
- சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை - திரும்ப திரும்ப ஒரே விடயத்தை சொல்லுதல்
- சோம்பலே சோறு இன்மைக்குப் பிதா - சோம்பறித்தன்மையின் இழிவு
- தஞ்சம் என்று வந்தவனை வஞ்சித்தல் ஆகாது - அடைக்கலம் புகுந்தோரை இகழுதல் தகாதது
- தட்டானுக்கு சட்டைப் போட்டால் குட்டைப் பையன் கட்டையால் அடிப்பான் - தட்டையான அரிசியை களத்தில் அடித்து தோல் நீக்குவான் விவசாயி
- தந்தை எவ்வழி புதல்வனும் அவ்வழி - முத்தோரின் வழிகாட்டல்
- தலை இருக்க வால் ஆடலாமா? - முதன்மையானவர் இருக்க பின்னுல்லவர் முன்வரக் கூடாது
- தாயிற் சிறந்த கோயிலும்மிலை - கடவுளை விட தாய் மேலாவள்
- தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் - சிறு வயதில் உள்ள பழக்கம் இறக்கும் வரை மாறாது.
- நகத்தாலே கிள்ளுகிறதைக் கோடாரி கொண்டு வெட்டுகிறான் - சிறு விடயத்தை பெரிதாக்கல்
- நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும் - சிறுமையிலும் சிறப்புண்டு
- நமக்கு ஆகாததது சஞ்சோடு ஒக்கும் - பிடிக்காத விடயத்தை அதிகம் வெருப்போம்
- நாயைக் கண்டால் கல்லை காணோம், கல்லைக் கண்டால் நாயை காணோம் - ஒன்று இருக்கும் போது மற்றொன்று இருக்காது.
- நாய்க்கு வேலையில்லை நிற்க நேரமும் இல்லை - பொய் பிதற்றல்
- நித்தம் போனால் முத்தம் சலிக்கும் - தொடர் செயல் வெறுப்பை உண்டாக்கும்
- நிழலின் அருமை வெயிலிற் போனால் தெரியும் - ஒன்றில் சிறப்பை மற்றொன்றால் அறிவர்
- நீர் மேல் எழுத்து போல் - உண்மையில்லா பேச்சு
- நூல் கற்றவனனே மேலானவன் - புத்தகப் படிப்பின் மேன்மை
- நெருப்பு என்றால் வாய் வெந்து போகுமா? - பொய் பயம்
- நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்கும் பாயும் - நன்மை வளரும் அதே நேரம் தீமையும் வளரும்
- நேற்று உள்ளார் இன்று இல்லை - நிரந்தரமற்ற வாழ்க்கை

AGARAM DHINES

- நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம் - நோயின்மையே சிறந்த செல்வம்
- பசியுள்ளவன் ருசி அறியான் - தேவையின் போது குறை கூறமாட்டோம்
- பணம் பந்தியிலே குணம் குப்பையிலே - பண மதிப்பு
- பணம் பாதாளமட்டும் பாயும் - பணத்தின் வலிமை
- பதறாத காரியம் சிதறாது - எச் செயலையும் பதற்றமில்லால் செய்ய வேண்டும்
- பழகப் பழகப் பாலும் புளிக்கும் - தொடர் செயல் வெறுப்பை உண்டு பண்ணும்
- பன்றிக்கு பின் போகிற கன்றும் கெடும் - முன்னோரை பின்வருவோர் பின்பற்றுவர்
- பாம்பின் கால் பாம்பறியும் - கபடனின் செயலை மற்றுமோர் கபடன அறிவான்
- புலிக்கு பிறந்தது புனையாகுமா? - வீரத்தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளையும் வீரனாகதான் வாழ்வான்
- பெண் என்றால் பேயும் இரங்கும் - பெண்களுக்காக எல்லாரும் வருவார்கள்
- பேராசை பெருநட்டம் - அதீத ஆசை துன்பத்தைத் தரும்
- மடியிலே கனமிருந்தால் தான் வழியிலே பயம் - தவறு செய்தால்தான் பயப்பட வேண்டும்
- மண்ணுயிரை தன்னுயிர் போல் நினை - எல்லா உயிர்களையும் சமமாக கருத வேண்டும்
- முதல் கோணல் முற்றுங் கோணல் - ஆரம்பம் பிழைத்தால் முடிவும் பிழையாகும்
- மேற்கே மழை பெய்தால் கிழக்கே வெள்ளம் வரும் - நன்மை தீமை மாறி மாறி வரும்
- யானைக்கும் அடி சறுக்கும் - பெரியோருக்கும் தடுமாற்றம் உண்டாகும்.
- வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் - திறமையுள்ளவன் எப்படியும் வெற்றியடைவான்
- வாழையடி வாழையாக - பரம்பரை பரம்பரையாக
- விளையும் பயிர் முளையிலே தெரியும் - ஒருவரின் செயலின் விளைவு அதன் தொடக்கத்திலேயே தெரியும்
- வெந்தப் புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல - தொடர் துன்பம்

AGARAM DHINES